Registered as a News Paper — பக்கங்கள் 06 — விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 12 | 27 - 07 - 1992 | திங்கட்கிழமை | ஓசை 160

## இராணுவத்தில் சேர்ந்து கொள்ள சிங்கள இளைஞர் தயக்கம்

(கொழும்பு)

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதற்காக அண்மையில் விளம்பரம் செய்தபோது மிகக் குறைவான எண்ணிக்கையினரே விண்ணப்பித்தார்கள் என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர் அனுருத்தா ரத்வத்தை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். முன்பிருந்த நிலைமை இப்போது மாறியுள்ளது. மக்கள் அரசில் நம்பிக்கையை இழந்து வருகிறார்கள். இப்போது நடைபெறும் யுத்தம் நாட்டின் இறமையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கான போராட்டமல்ல என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் என்று அவர்மேலும் கூறினார்.

## இலங்கைத் தமிழர் தேசிய இனப் பிரச்சினை அரசியல் தீர்வு காணக் கோரி

# லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

இலங்கைத் தமிழரின் இனப் பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென எனவும், நிரந்தரமான அமைதி ஏற்படுத்தப் படவேண்டும் எனவும் கோரி லண்டனில் பல ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இந்த ஊர்வலத்தை உலகத் தமிழர் சம்மேளனம் ஒழுங்குசெய்திருந்தது.

பிற்பகல் 1-30 மணியளவில் ஹைட்பார்க் பூங்காவிலிருந்து இவ் ஊர்வலம் ஆரம்பமாகியது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் கைகளில் வெள்ளை நிற கொடிகளை ஏந்தி வெள்ளை உடை அணிந்து எங்கும் அமைதியின் சின்னமான வெள்ளை மயமாக காணப்பட்டனர்.

இந்த ஊர்வலத்தில் பெண்கள், ஆண்கள், முதியவர்கள், சிறியவர் என பல திறத்தினரும் அணிவகுத்துச் சென்றனர். சில பெண்கள் கைக் குழந்தைகளுடனும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

''எங்களுக்கு நீதியான அமைதி வேண்டும்'' ''நியாயமற்ற போரை ஏற்றுக்கொள்ள மாட்டோம்'', ''எங்கள் நியாயமான உரிமைகள் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும்'' என்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றது. பாடல்களும் இசைக்கப்பட்டன.

சப்பீட்டோ சதுக்கத்தில் பல தமிழ் பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர். தமிழ் மக்கள் அமைதியை விரும்புகிறார்கள் ஆனால் இந்த அமைதி தமிழர்களின் உரிமை வழங்கும் அமைதியாக - சமாதானமாக இருக்கவேண்டும் என அவர்கள் வலியுறுத்தினார்கள்.

### வங்காளவிரிகுடாவில் நங்கூரமிட்டிருந்த

## இரு சரக்குக்கப்பல்கள் கடற்படையால் சோதனை

கிழக்கு மாகாணக் கரைக்கு அப்பால் நங்கூரமிட்டு இருந்த இரண்டு வெவ்வேறு கப்பல்கள் சிறிலங்கா கடற்படையின் தீவிர பரிசோதனைக்கு உள்ளாகியுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு இராணுவ தளபாடங்...

...டன் திருத்த வேலைகளுக்காக நங்கூரமிடப்பட்டதாக கப்பலின் அதிகாரிகள் தெரிவித்தனராம்

இதேபோல் கடந்த செவ்வாயன்றும் பாணமைக் கரைக்கு அப்பாலும் ஒரு கப்...

...இருந்தது. இந்த இரண்டு கப்பல்களும் வெளிநாட்டுக்கு சொந்தமான வர்த்தக கப்பல்களே.

எனினும், ஐரோப்பாவிலுள்ள சில ஆயுத வர்த்தகர்களோடு விடுதலைப்புலிகள்...

## படைத் தலைமைக்குள் முரண்பாடு உள்ளதா?

### – அனுருத்த ரத்வத்த கேள்வி

(கொழும்பு)

''கூட்டு நடவடிக்கைக் குழுவிற்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும், படைத் தளபதிகளுக்கும் இடையில் பிரச்சினையுள்ளதா? அரசாங்கத்தின் பத்திரிகையான ஒப்சேவர் எழுதி உள்ள ஒரு ஆசிரியத் தலையங்கம் இந்தக்கேள்வியை எழுப்ப வைக்கிறது.''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பியும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான கேர்ணல் அனுருத்த ரத்வத்த பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

கட்டளைப் பணியகத்திற்கும், படைத்தளபதிகளுக்கும் இடையேபிரச்சினையிருந்தால் யுத்தத்தை எப்படி வெற்றிகரமாக நடத்த முடியும். இதற்குப் பிரதமர் பதில் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாம் யதார்த்தத்தை உணர வேண்டும். வாலிப உயிர்களுடன் விளையாடக் கூடாது. இன்று நடப்பது தனிப்பட்ட விஷயமல்ல. ஒருவரின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகக் கண்டபடி செயற்பட முடியாது என்றும் அவர் கூறினார்

தொடர்ந்து பேசிய அவர்; தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இரகசியப் பேச்சு நடப்பதாகக் கூறப்படுகின்றது. இதில் உண்மைநிலை எமக்குத்தெரியாது. அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இரகசியப் பேச்சை ஆரம்பித்துள்ளதா? இல்லையா என்பதைப் பிரதமர் சபையில் அறிவிக்கவேண்டும் என்றும்,

ஏற்கனவே பதினான்குமாதங்கள் அவர்களுடன் பேசினீர்கள். என்ன பேசினீர்கள் என்பதை இன்று வரை நாம் அறியோம், நாடும் அறியாது. அந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்தவா போகிறீர்கள் என்றும் கேட்டார்.

## வெலிக்கடைப் படுகொலை மாபெரும் நினைவுக்கூட்டம்

1983 யூலை 25, 27-ம்திகதிகளில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ்ப் போராளிகள், பொதுமக்களை நினைவுகூரும் முகமாக இன்று மலை 7.00 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோவில் முன்றலில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்டம் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர்.

இந் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக யாழ். மாவட்டத்தினரின் ''இந்த மண்ணும் மாவீரரும்'' என்னும் நாடகமும் இடம் பெறவுள்ளது.

## வவுனியா நகரப்பகுதியில் ஆயுதபாணிகள் கொள்ளை

வவுனியா நகரப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இரவு நேரங்களில் ஆயுதம் தாங்கிய குழுவினர் பெறுமதிமிக்க பொருள்களை கொள்ளையடித்து வருகின்றனர்.

இரவு வேளைகளில் தமிழ்ப் பொதுமக்களின் வீட்டின் கதவுகளைத் தட்டும் இனந்தெரியாத குழுவினர் வீட்டில் உள்ளோர் எழுந்து வரவோ அல்லது சத்தம் போடாமல் இருக்கும் போதோ கதவுகளை உடைத்துக் கொண்டு கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

பொலிஸ் வாகனங்கள் வீதியில் ரோந்து செல்லும் சமயங்களிலேயே இது நடைபெறுகின்றது

இக்கொள்ளைகளில் ஈடுபடுவோர் ஆயுதங்களுடன் காணப்படுகின்றனர் என்றும், வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க பொருள்களை மட்டும் அபகரித்துச் செல்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

## தடுத்து வைக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

(கொழும்பு)

பலவத்தை இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு நஷ்டஈடாக 15,000 ரூபாவும், சட்ட விரோதமான தடுப்பு மற்றும் சித்திரவதைகளை அனுபவித்தமைக்காக 20,000 ரூபாவும் வழங்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய தேசிய கடதாசி ஆலை ஊழியரான எச்.கே.டபிள்யு. வித்தியமனி என்பவர் 19-10-90-ல் தாம் எம்பிலிப்பிட்டிய பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாகவும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இவ்வழக்கு விசாரணைக்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

# சிங்கள மக்கள் மத்தியில் ராணுவம்

இரண்டு வெவ்வேறு கப்பல்கள் சிறிலங்கா கடற்படையின் தீவிர பரிசோதனைக்கு உள்ளாகியுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு இராணுவ தளபாடங்கள் விநியோகிப்பதில் இக்கப்பல்கள் ஈடுபட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்திலேயே சோதனைகள் நடத்தப்பட்டதாயினும் அவை சரக்குக் கப்பல்களே என்பது பின்னர் தான் ஊர்ஜிதமாயிற்றாம்.

கடந்த வியாழனன்று கிழக்கு மாகாணத்தின் சங்கமான் கந்தை கரைக்கு அப்பால் சந்தேகத்திற்கு இடமான முறையில் நங்கூரமிட்டிருந்த ஒரு கப்பலைக் கண்டு சிறிலங்கா கடற்படையினர் விரைந்து சென்றனராம். கடற்படையினர் இக் கப்பலைச் சோதனையிட்ட போது எந்த இராணுவ தளபாடங்களும் காணப்படவில்லை என்பது லின் அதிகாரிகள் தெரிவித்தனராம்

இதேபோல் கடந்த செவ்வாயன்றும் பாணமைக் கரைக்கு அப்பாலும் ஒரு கப்பல் காணப்பட்டதாம். இக் கப்பலில் அரிசி ஏற்றப்பட்டு சொந்தமான வர்த்தக கப்பல்களே.

எனினும், ஐரோப்பாவிலுள்ள சில ஆயுத வர்த்தகர்களோடு விடுதலைப்புலிகள் வெற்றிகரமாகப் பேரம்பேசி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு மத்தியிலும் புலிகளுக்கு ஆயுதங்கள்

—டென்சில் கொப்பேகடுவ

தமது கடுமையான கடல் ரோந்துகளுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் தேவையான இராணுவ தளபாடங்களைப் பெற்றுவருவதாக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்தார்.

பலாலிமுகாமில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர், மற்றும் படைத்தளபதிகள் கலந்து கொண்ட மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## அவசரகால சட்டத்தால் பயன் ஏதும் இல்லை

(கொழும்பு)

- ஹலீம் இஷாக்

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அடுத்தடுத்து பல முறை கொல்லப்பட்டு வருகின்றனர். அவர்கள் அங்கு தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதநிலை, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கமுடியாத நிலை அந்த நிலையில் அவசரகாலநிலையை மாதாமாதம் நீடிப்பதால் என்ன பயன் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பி. ஹலீம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் மண்ணெண்ணெய்

(கொழும்பு)

சுமார் இரண்டு இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெய்யுடன் தனியான கப்பல் ஒன்று மிக விரைவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய உள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் தான் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து மேற்படி நடவ

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களை இணைப்பு பலிகொள்கிறதாம்

(கொழும்பு)

முஸ்லிம்களை அநியாயமாகப் பலிகொள்ளும் வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பை ஒகஸ்ட் மாதத்தில் முற்றாக அகற்றுங்கள் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன கோரியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீது பேசிய அவர் மேலும் கூறியதாவது;

வடக்கு-கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் விரும்பவில்லை. தங்கள் முடிவை அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவருகிறார்கள்.

வடக்கு-கிழக்கு இணைப்பை நாம் நீடிக்கக் கூடாது. அந்த இணைப்பைத் துண்டிக்க அரசு முன்வந்தால் மக்கள் ஐக்கிய முன்னணி அதை ஆதரிக்கும் என்றும் அவர் கூறினார்.

## ஐலன்ட் பத்திரிகைமீது அமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று வெளியான ஐலன்ட் நாளிதழின் ஆசிரியத் தலையங்கம் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறுவதாக இருப்பதாகவும், உண்மைகளைத் திரித்துக்கூறுவதாக இருப்பதாகவும் பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றுபற்றி சுதந்திரக்கட்சி எம்.பியான நிமால் சிறிபால டி சில்வா கேட்ட கேள்வி ஒன்றிற்கான பதிலை பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் தெளிவாக வழங்க

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள மக்கள் மத்தியில் ராணுவம் ஆதரவை இழந்து வருகின்றது

-ஜெனரல் ஹமில்டன் ஆதங்கம்

(கொழும்பு)

பாதுகாப்புப்படையினருக்கு சிங்கள மக்கள் ஆதரவளிப்பதும், கௌரவிப்பதும் தற்போது வெகுவாகக் குறைந்து வருகின்றது என கூட்டுப் படைத் தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெறுவதற்காக கொள்ளுப்பிட்டி கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 1990 யூனில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானபோது எல்லா இடங்களிலும் பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகள் காணப்பட்டன. ஆனால் இன்று அவைகளைக் கான காண முடியவில்லை. எங்கள் மீது சேறு வீசப்படுகிறது. மக்கள் அனைவரும் எங்களை தங்களின் இராணுவம், தமது கடற்படை, தமது பொலிசார் என மதிக்காவிட்டால் இந்த யுத்தத்தில் பெறும் வெற்றி எங்களுக்கு உதவப்போவதில்லை. உங்கள் சார்பில் யுத்தமிடும் நாங்கள் அனைவரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும், அரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறெல்லாம் பங்களிப்புச் செய்யலாம் என்பது பற்றி அவர் குறிப்பிடுகையில், 1983-ம் ஆண்டில் இருந்து எமது படைவீரர்கள் பங்கர்களிலும், அகழிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இன்றும் இந்த நிலை மாறவில்லை. படையினரின் துயர நிலையை போக்க அநேக வற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்யலாம். படையினரிடம் நேரடியாகச்சென்று சில பொருள்களைக் கையளித்து அவர்களை உற்சாகப்படுத்தலாம்.

சண்டையின் போது சிக்குபவர்களை அவர்களின் வீடுகை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த மூன்று மாதப் போரில் இராணுவம் எதையும் சாதிக்கவில்லை

– கேணல் சரத் முனசிங்கா

(கொழும்பு)

கடந்த மூன்று மாத காலத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் பெரிய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை. சில இடங்களில் மட்டும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் விஸ்தரிக்கப்பட்டன மேற்கண்டவாறு கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

கிழக்கில் பாதுகாப்புப்படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என பலஇடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றிக் கேட்கப்பட்டபோது அப்பகுதிகள் அடர்ந்த காட்டுப்பிரதேசங்கள்எனவும் அங்கு விடுதலைப் புலிகள் இருக்கக் கூடுமெனவும் கேணல் முனசிங்கா குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த மூன்று மாத காலமாகக் குடாநாட்டினுள் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும், அவை பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தன என அரசு கூறிக்கொண்டதும் தெரிந்ததே.

## லெப். கேணல் சரா நினைவுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்[

லெப். கேணல் சாராவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 27 ஆம் திகதி சரா வீடமைப்புத் திட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்த நினைவஞ்சலிக் கூட்டம் திருக்கோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டம் பிற்பகல் 4. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## செஞ்சோலை இசைநிகழ்ச்சி

(நமது நிருபர்)

செஞ்சோலை நிதி சேகரிப்பிற்கான இசைநிகழ்ச்சி நாளை 28 ஆம் திகதி அரியலை காசிப்பிள்ளை அரங்கில் இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதே இசைநிகழ்ச்சி 29 ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## தொப்பிக்கல பகுதியில் புதிய இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியான தொப்பியாகல பகுதியில் கடந்த வெள்ளி முதல் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு விமானத் தளத்தில் இருந்து ஹெலிகளும், விமானங்களும் அப்பகுதியை நோக்கிப் பறந்த வண்ணம் இருப்பதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீரைப் பேணி
சீரைப் பெறுவோம்

# வரி விளம்பரம்

## ஆங்கில வகுப்புக்கள்

8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டுகளுக்காக துரித ஆங்கில வகுப்புக்கள் இணுவில் தெற்கு, சாந்தி ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் 1 -8- 1992 மீண்டும் ஆரம்பமாகிறது. உடன் தொடர்பு கொள்ளவும்.
( சி/ 4752 )

## 200 நாடகங்கள்

யாழ்ப்பாணம் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும்ஒரேயொரு மாணவனான -200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். சில்லறைக்காரர்கள் 25 - முதலாம்பிள்ளை 30- (2749)

## தவறிவிட்டது

24-07-92 நாகராசா ஜெயகாந்தன் என்பவருடையஅடையாள அட்டை யாழ் - கிளாலி வீதியில் பிரயாணம் செய்யும் பொழுது தவறிவிட்டது. இல. 6 5 1 9 8 1 9 13Vகண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். ஜெயாபென் சிஹவுஸ் இல 160 நவீனசந்தை யாழ்ப்பாணம். [2896]

## விற்பனைக்கு

நல்லின சீமை முயல்கள், வான்கோழி, 'பாம்ஸ்'கோழி 'பென்டெம்' கோழி, பெமெரியன் நாய்க்குட்டி, தாரா மற்றும் கோழிகள் விற்பனைக்குண்டு ஸ்கைலை ஏஜன்சி, பிரதானவீதி, சுழிபுரம்.
[2900]

வீட்டிற்கும் கந்தோருக்கும் பாவிக்கக்கூயடி இரும்புப் பைப்பிலான குசன் கதிரைகள் (3பேர் வசதியாக இருக்கக்கூடியது) விற்பனைக்குண்டு. குறைந்த எண்ணிக்கையுடைய கதிரைகளே கையிருப்பில் உண்டு. உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள் ஸ்ரீலங்காஅச்சகம் 336, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [2899]

கிணற்றுப்பங்குடன் 8 பரப்புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்குஅல்வாய் [4773]

## தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுத

# 1-ம் வருட நினைவலைகள்

அன்னை மடியில்
08 — 11 — 1975

ஆனையிறவு மண்ணில்
27 — 07 — 1991

## வீரவேங்கை திசைவீரன்

(சற்குருநாதன் - சற்குணபேசன்)


திசைவீரன் என்றொரு இளவேங்கை இம்மண்ணில்;
விதையாகி வருடமொன்று
இசை கொண்ட மாவீரன் உடல் கூட மீளலை ...
புகழ்பாடும் ஆனையிறவு

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(2897)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## மேஜர் சொனி

(சிவஞானசுந்தரம் அசோகன்)

வல்வை நகரில் ஜனனம்
28-11-1967

ஆனையிறவில் வீரச்சாவு
27 07-1991

முற்று ஆற்றி முற்றி யவரையும் பற்று ஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண். (748)

புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. (780)

- திருக்குறள்

27-07-1991 அன்று இவருடன் களப்பலி கண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலி.

14-08-1992 வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் அபரபக்ஷத்து பிரதமை திதி நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் யாவரையும் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (2872)

- குடும்பத்தினர்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

# நினைவு கூருகின்றோம்..

## 1992 - 07 - 27

1983 ஆம் ஆண்டு இதே தினத்தில் வெலிக்கடைச் சிறையில் சிறை அதிகாரிகளின் உதவியுடன் சிங்களக் காடையர்கள் இரண்டாவது தடவையாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட -

**சிறிக்குமார்** [முத்துக்குமார் சிறிக்குமார் - தேவாலய வீதி, உரும்பராய் கிழக்கு]

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மன்னார் - பூநகரி ஒல்லாந்தர் கோட்டையில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

**மேஜர் அசோக்** [இராஜநாயகம் டேவிட் பாலச்சந்திரன் - உயிலங்குளம், மன்னார்]

**2-ம் லெப். சேகர்** [செபமாலை சிறிதரன் - குமானயங்குளம், அடம்பன், மன்னார்]

**லெப். துரைமணி** [செபஸ்ரியான் மில்டன் எட்வேட் - இசைமாலைத்தாழ்வு, முருங்கன், மன்னார்]

**லெப. அலிபா** [யோசப் - நறுவிலிக்குளம், மன்னார்]

**2-ம் லெப். ரகு** [இராமசாமி விஜயகுமார்-வேப்பங்குளம், மன்னார்]

**செந்தூரன்** [சண்முகநாதன் தங்கேஸ்வரன் - எட்டாம்கட்டை, உயிலங்குளம், மன்னார்]

**2-ம் லெப். பெரியதம்பா** [வின்சன்ட் பிரான்சிஸ் ஞானதீபன் - இளவாலை, யாழ்ப்பாணம்]

வவுனியா -பெரிய தம்பனைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட -

**ஈசன்** [தம்பையா கணேஸ் - தம்பனை, வவுனியா]

1988 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்ட நிலையில் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**லெப். ராஜு** [சிவஞானசுந்தரம் ஐங்கரன் - 'ஞானகிரி', ஐங்கரன் வீதி, அளவெட்டிவடக்கு]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு / முள்ளியவளை, தண்ணீரூற்று ஆலடிச் சந்தியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**குமரன்** [பிச்சை அன்பரசன் - அளம்பில், மணலாறு]

காரைநகரில், தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட, 3 தமிழர்கள்- யாழ்- கந்தர்மடச் சந்தியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை-திரியாய்ப்பகுதியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**நிர்மல்** (அப்துல் நசார் - குடவைக்கட்டு, திருக்கோணமலை)

**மோகன்** (திருக்கோணமலை)

அம்பாறை-கோயாரி இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல்போன, பொத்துவிலைச்சேர்ந்த 5 தமிழர்கள்.

மட்டக்களப்பில், இடம்பெயர்ந்தோர் முகாமொன்றில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல்போன மாவடி.வேம்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிக்கையின்போது தடை முகாம் மீது இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். கேணல் சரா** [சின்னத்துரை ஜீவராசா - ஜி.பி.எஸ். வீதி, கல்வியங்காடு, யாழ்]

**மேஜர் குகதாஸ்** [இராசரத்தினம் இராஜேந்திரன் - உரும்பராய் வடக்கு, யாழ்.]

**மேஜர் சொனி** [சிவஞானசுந்தரம் அசோகன் -மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ் ]

**கப்டன் நிறைவன்** [ராமமூர்த்தி விதுரன் - இலுப்பையடிச்சேனை, பன்குடாவெளி, மட்டக்களப்பு]

**2-ம் லெப் ஜெயந்திரன் / ஜெயச்சந்திரன்** (கந்தப்பர் தவராசா - குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

**2-ம் லெப். அல்பேட் / பாபு** (நடராசா கலைச்செல்வன் - கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை, யாழ்.)

**2-ம் லெப். நளினன்** (நாகராசா சிவகுமார் - ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை, மட்டக்களப்பு)

**2-ம் லெப். நிதி** (செல்வநயினார் சுந்தரராஜன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

**2-ம் லெப். விக்கி** (இரத்தினம் சாந்தவேல் - கெருடாவில், தொண்டமானாறு, யாழ்.)

**2-ம்லெப் சுஜன்/கஜன்** (கோபாலப்பிள்ளை புஷ்பராசா - 52-ம் கட்டை, ஈச்சிலம்பத்தை, மூதூர், திருக்கோணமலை)

**2-ம்லெப் நிருபன்** (வேலாயுதம் பாலச்சந்திரன் - 1-ம் வட்டாரம், கிண்ணியா, திருக்கோணமலை)

**2-ம்லெப். அனந்தன்** (கந்தசாமித்துரை ராஜவேல் - வேம்படி, வல்வெட்டித்துறை, யாழ்.)

**திசைவீரன்** (சற்குருநாதன் சற்குணபேசன் - கச்சாய் வீதி, கொடிகாமம், யாழ்.)

**ரகீம்/சகிம்** (நாகலிங்கம் ஜெகதாஸ் - உரும்பராய் தெற்கு, யாழ்.)

**திகில்** (தங்கையா சேரன் - டி-7 திட்டம், கிளிநொச்சி)

**கந்தன்** (டானியல் ராஜகுமார் - சக்கோட்டை, அல்வாய் வடக்கு, யாழ்.)

**வேலுப்பிள்ளை** (யூனியன் கந்தையா கந்தசாமி - சாவகச்சேரி, யாழ்.)

**கிர்மானி** (யோண் எட்வேட் கெனடி - 3ஏ 01மவுண்ட் கார் மேல் வீதி, குருநகர், யாழ்.)

**பவா** (கதிரித்தம்பி கணேசலிங்கம் - நல்லூர், பூநகரி, மன்னார்)

**பீலிக்ஸ்** (அருளானந்தம் ரொனால்ட் ஆனந் - கொன்சுவாசர், தொட்டுவை)

**இராஜன்** (குமாரசாமி குணராசா - கேணியடி, கொக்குவில் மேற்கு, யாழ்.)

**வரதன்** (மாசிலாமணி மகேந்திரன் - பதுளை வீதி, பெரியபுல்லுமலை ஏற்றம், மட்டக்களப்பு)

**ஆனந்தபாபு** (தங்கராசா நடராசா-120, 3-ம்குறிச்சி, 7-ம் வட்டாரம், துறைநீலாவணை, மட்டக்களப்பு)

**புறூஸ்லி மூர்த்தி** (சீவரத்தினம் சின்னவன் - தாளையடி வீதி, சித்தாண்டி, மட்டக்களப்பு)

**கரன்** (வேலாயுதம் சிவனையா - கங்குவேலி, மூதூர், திருக்கோணமலை)

**மொராஜி** (அரசரட்ணம் அரவிந்தன் - சேனையூர், கட்டைப்பறிச்சான், மூதூர், திருக்கோணமலை)

**பிருந்தன்** (சின்னராசா ஜெராட்திலகர் - பள்ளங்கோட்டை, நாநாட்டான், மன்னார்)

**கில்பேட்** (ஞானராசா ஞானதீபன் - இலுப்பைக்கடவை, மன்னார்)

**லெப்- நெல்சா** (சரோஜினிதேவி சின்னக்குட்டி - கச்சாய் தெற்கு, கொடிகாமம், யாழ்.)

**லெப். குட்டி** (செபஸ்தியம்மா அலோசியஸ் -6-ம் வட்டாரம், வங்காலை, மன்னார்)

**2-ம் லெப். மதனா** (சிவமலர் தளையசிங்கம் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்.)

**2-ம் லெப். மெடினா/மெடோனா** (செல்வராணி மாயழகு - பல்லவராயன்கட்டு, பூநகரி, மன்னார்)

**2-ம் லெப். வதனி** (கென்சி பத்தினாதன் -மன்னார்)

**2-ம் லெப். யசீர்மா** (சிவலோஜினி சிவானந்தய்யர் -அல்வாய்வடக்கு, திக்கம், யாழ்)

**2-ம் லெப். சுந்தரி** (சுஜிதா தேவநாயகம்- 2-ம்வட்டாரம், நிலாவெளி, திருக்கோணமலை)

**2 ம் லெப். இளவரசி** [சந்திரபவானி சிவப்பிரகாசம் - கொக்குத்தொடுவாய், மணலாறு]

**கார்த்திகா** [மேரிகலிஸ்ரா சூசைப்பிள்ளை - 16, சென் மேரிஸ்வீதி, நாவாந்துறைவடக்கு, யாழ்.]

**பிரதீபா** [ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு,

## தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி சாவகச்சேரி. [2876]

---

மாபெரும்

சைக்கிள், மரதன்

## ஓட்டப் போட்டிகள்

திட்டமிட்டபடி எதிர் வரும் 01 - 08 - 92 அன்று இப் போட்டிகள் நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினால் நடைபெறவிருக்கின்றன. போட்டி வீரர்கள் அனைவரும் காலை 5.30 மணிக்கு முன்னதாக எமது நிலையத்திற்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

க. கோணேஸ்வரன்

[4770] தலைவர்.

---

## திருவிழா

(கொழும்புத்துறை)

நல்லூர் நாயன்மார் கட்டு அருள்மிகு ஸ்ரீ இராசஇராசேஸ்வரி அம்பாள் (பேய்ச்சி அம்பாள்) ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 22ம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


எதிர் வரும் 31ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி சனி, ஆடிப் பூரம் தினத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [24]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆக்கிரமிப்பு மண்ணில்

13 - 07 - 1974



விடுதலைப் போரில்

27 - 07 - 199

## 2-ம் லெப் [illegible]

( டானியல்-ராய்குமார் )

என் மகனே நீ கர்த்தருடைய
சிட்சையை அற்பமாக எண்ணாதே
அவர் கடிந்து கொள்ளும் போது
சோர்ந்து போகாதே - நீதி 3-11

தமிழினத்தின் தேவைகளை நீ உணர்ந்தாய்
தந்தை தாய் சகோதரத்தை நீ - மறந்தாய்
ஈழத்தை மீட்கவென உறுதிகொண்டாய்
அறப்படையாம் புலிப்படையில் நீ இணைந்தாய்
அறநெறிகள் கொண்டதுவாம் புலிப்படை - உயர்
தர்மதுடன் வளர்த்து விட்டார் தலைவர் உன்னை
நீ சென்ற போர்க்களங்கள் நாம் அறியோம்
உன்பாதை நெடியது என்று நாம் உணர்ந்தோம்
அப்பாவி குமார்என்று அறிந்த மக்கள்
புலிவீரன் குமார் என்று கூறிநின்றார்
புலிவீரர் அவர்கள்தம் ஒழுக்கமுடன்
செயல்பட்டாய் நீயும் அடக்கமுடன்
வந்ததையா நடுச்சாமம் செய்தியொன்று
எதிரிமுகாம் களத்தினிலே மடிந்தாய் என்று
பெற்றாரும் உற்றாரும் கலங்கி நின்றோம்-
ஆனாலும் தெழிந்து விட்டோம்
நீ- புலிவீரன் என்று

27-07-92 பிற்பகல் 3 மணியளவில் சக்கோட்டைபுதிய ஏற்பாட்டுக் கிறிஸ்து சபையில் ஆராதனை நடைபெறும்
-குடும்பத்தினர்

அல்வாய் வடக்கு
சக்கோட்டை

(2835)

---

... [சிவஞானசுந்தரம் அசோகன் -மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ் ]

**கப்டன் நிறைான்** [ராமமூர்த்தி விதுரன் - இலுப்பையடிச்சேனை, பன்குடாவெளி, மட்டக்களப்பு]

**கபடன் ரகீம** (ஐசக்டொனால் வீரபாகு-அளவெட்டி மேற்கு, யாழ்)

**கப்டன் நிதி** [இரத்தினம் இலங்கேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம், யாழ் ]

**கப்டன் கீர்த்தி** (வீரப்பாபிள்ளை கனகேஸ்வரன் - இடைக்குறிச்சி, வரணி வடக்கு, யாழ்.)

**கப்டன் அல்பேட்** (கந்தசாமி வன்னியசிங்கம் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, யாழ்)

**கப்டன் சௌகான்** [ஜோய்அன்ரனி சிவானந்தன் - பற்றிமாவீதி, பண்டத்தரிப்பு, யாழ்]

**கப்டன் சிவம் / பவான்** (திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன் - நெல்லைநாதன்வீதி, இமையாணன், உடுப்பிட்டி, யாழ்)

**கப்டன் சத்தியராஜ்** [கந்தையா சத்தியசீலன் - கோபாலபுரம், நிலாவெளி, திருக்கோணமலை]

**கப்டன் வினோத்** [கனகராசா பிரபாகரன் - மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி, யாழ்.]

**லெப். வர்மன்** [பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி - பேச்சியம்மன் கோயிலடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு]

**நிதி** [வசந்தமலர் செல்லத்துரை - கச்சாய் தெற்கு, கொடிகாமம், யாழ்.[

**லெப். சபா** [மாரிமுத்து பத்மநாதன் - சி. ஆர். ஏ. பண்ணை, பள்ளக்கால், குண்டகசாலை]

**லெப். உமாசங்கர் / ரவி** [சின்னமணி கன்சியஸ்- 8/3, றெக்கிளமேசன் வீதி, குருநகர், யாழ்.]

**லெப். நிமலேந்திரன் / பிரசன்னா** [தங்கவேல் செந்தில்குமரன் - நடராசா வீதி, வல்வெட்டித்துறை, யாழ்.[

**லெப். சத்தியகுமார்** [பொன்னையா சிவநேசராசா - திருப்பழுகாமம், மட்டக்களப்பு]

**லெ . அன்பு** [பாலச்சந்திரன் ரமணன் - அரசடி ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை]

**லெப். வினோத்** (தர்மலிங்கம் தயாளன் - ஆண்டித் தோட்டம், அல்வாய், யாழ்.)

**லெப். பாரதி** (நவரட்ணம் கோபாலப்பிள்ளை-செட்டிப் பாளையம், மட்டக்களப்பு)

**லெப். பேசியன் / கேசவன்** ( பரஞ்சோதிநாதன் நியூட்டன் பிரான்சிஸ் - சென். அன்ரனி ஒழுங்கை, பண்டத்தரிப்பு, யாழ்.)

**2-ம் லெப். வாணன் / குமார்** (நடேஸ் ஜெயக்குமார் - சமாதியடி, உரும்பராய் வடக்கு, யாழ்.)

**2 லெப். மயில்வாகனம்** (சின்னத்தம்பி சுந்தரலிங்கம் - பழைய தோட்டம், வல்வெட்டித்துறை, யாழ்.)

காசம் - கொக்குத்தொடுவாய், மணலாறு]

**கார்த்திகா** [மேரிகலிஸ்ரா சூசைப்பிள்ளை - 16, சென் மேரிஸ்வீதி, நாவாந்துறைவடக்கு, யாழ்.]

**பிரதீபா** [ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு]

**அன்பினி** [விஜிதா சிவனடி - சங்கரத்தோட்டம், மண்டான். கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ்]

**சிகிலா** [ரஞ்சினி நடராசா தொல்புரம்மத்தி, சுளிபுரம், யாழ்.]

**தங்கமணி** (புஸ்பகலா நடராசா - கொத்தனை, கரவெட்டி கிழக்கு, யாழ்)

**டட்லியா** (வரலட்சுமி தேவசிகாமணி - சடையாண்டி கோயில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை, யாழ்)

**யாழ்மொழி** (விஜயலதா பாக்கியநாதன் - போயிட்டி இளவாலை, யாழ் )

**சுனித்தா** (புஸ்மாவதி கருணாகரன் - குச்சவெளி, திருக்கோணமலை)

**யஸ்மின்** (செல்வமலர் கோபாலபிள்ளை - மூதூர், திருக்கோணமலை)

**காயத்திரி** (உமாமேவி சந்திரசேகரம் - றெட்பானா. விசுவமடு, முல்லைத்தீவு)

**நிசா** (சுமதி சதாசிவம் - 1-ம் குறிச்சி, தம்பிலுவில், அம்பாறை)

**காண்டீபனி** (சுகந்தினி வேலாயுதம் - சாந்திநிகேதன், கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி)

**சுகந்தினி** (யோகா கணபதிப்பிள்ளை . செக்கட்டிப் புலவு, பம்பைமடு, வவுனியா)

**சசீந்தா** (சூரியகுமாரி சுப்பிரமணியம் -பம்பைமடு சந்தி, வவுனியா)

**சரத்பாபு**

**கப்டன் கோபி** (கந்தையா பேரின்பமூர்த்தி 6-ம் வட்டாரம். வேலணைத்துறை மேற்கு, தீவகம், யாழ்.)

மட்டக்களப்புப் - வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**விவே** (பெர்னாண்டோ உதயராஜ் - ஆரையம்பதி-03. மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சாராமல் இம்மண்ணின் மீட்பிற்காய் போராடியவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4763]

# 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

வீரஜனனம் :

19 - 04 - 1962



வீரச்சாவு :

27 - 07 - 1991

## லெப். கேணல் சரா

( சின்னத்துரை ஜீவராசா )


சரா
இவனோ முள்ளில் ரோஜா
கடுமை செறிந்த முகம்
வெடித்து உதிரும் சொற்கள்
அதன் மத்தியில்தான்
அந்த ஈரமான இதயம்
அடிக்க எடுத்த கையால்
அணைத்து சிரிக்கும் சுபாவம்
இவனின் கதைகள்
ஒன்றா இரண்டா
கோப்பாய் திருநெல்வேலி.........
மக்களைக் கேட்டால் தெரியும்
ஏன்..
கோட்டை பலாலி ஆனையிறவு
முகாம்களைக்கூட கேட்டுப்
பார்த்தால்
இவனின்வீரக்கதைகள் தெரியும்

ஈழத் தமிழரின்
இன்னல் கண்டு
இவனின்உள்ளம் துடித்தது அன்று
இளவேனில்கால
ஜேர்மனி வாழ்வை துறந்தான்
விடுதலைப் புலியணியில்
இணைந்தான்
இலங்கை இந்திய படைகளின்
வேங்கைச் சொப்பனமானான்
ஆண்டுகள் எட்டுகள் ஆடினான்
களத்தே
ஆனையிறவிலேஆகுதியானான்
வீரன் இவனது பாதை நாடி
விரைவோம் நாமும் விடியலை
நோக்கி

- நண்பர்கள்

(2898)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரத்தாயின்
மழலையக
28-5-1968

வீரமண்ணின்
மாவீரனாக
27-7-1991

### 2 ஆ வது லெப். அல்பேட்

(நடராசா கலைச் செல்வன் (பாபு)
திதி 14-8-1992

அன்னியப் படை எமை மிதித்தார் அதனால்
நீ பந்த பாசங்களையெல்லாம் அறுத்தெறிந்தாய்
சினங்கொண்டு போர்க்களம் குதித்தாய்
களம் குதித்த நீ எதிரிப்படை இடுப்பொடித்தாய்
இறப்பினிலும் சிறப்பினை நீ சேர்த்துவிட்டாய்
இனி ஈழத்தில் தமிழ் வாழ்ந்தால் நீயும் வாழ்வாய்.

இவருக்கும் இவருடன் ஆனையிறவில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைவாணி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை. (2849)

இவரது பிரிவால்வாடும்
க. நடராசா
குடும்பத்தினர்

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(சாவகச்சேரி)

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு அருகில் மோட்டார் வாகனச் சாரதி லைசென்சும் அதனுடன் பெறுமதியான தஸ்தாவேஜுகளும், பொருள்களும் கண்டெடுக்கப்பட்டு மட்டுவில் கமலாசனி மகாவித்தியாலய அதிபரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் மேற்படி பாடசாலையில் தமதுபொருள்களை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். [35]


### விசா மோசடி முறியடிப்பாம்

(கொழும்பு)

ஒரு விசா மோசடியை அயல் நாட்டுத் தூதுவரகம் முறியடித்தது என்று அரசாங்க சார்பு ஏடான தினகரன் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

அச்செய்தியில் மேலும் இலங்கையில் தேடப்படும் முன்னாள் அதிகாரி மேற்கு நாடொன்றுக்கு தப்பிச்செல்ல எடுத்த முயற்சி தோல்வி அடைந்துள்ளதாகவும், கிரிமினல் குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைக்காக வேண்டப்படும் நபர் ஒருவர் மேற்கு நாடு ஒன்றிற்கு தப்பிச் செல்ல முயற்சி எடுத்ததாகவும், அயல் நாடொன்றின் கொழும்பு உயர் ஸ்தானிகர் ஆலயத்தினர் கொடுத்த தகவலின் பேரில் அவரது முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் உமாசங்கர்

(சின்னமணி காஞ்சியஸ்)

வீரஜனனம் 27.08.1973
வீரச்சாவு 27.07.1991

குருநகர் என்ற எரிமலையானவன்
எங்கள் லெப். உமாசங்கர்
சருகென எதிரியை சாக்களம் போக்கியே
சாய்ந்தனன் நெஞ்செலாம் நிறைந்தனன் - அவன்
கொட்டிய குருதிச் சாற்றினில் இம்மண்
கொதித்தது; குளித்தது; குளிப்பால் விழித்தது
எட்டி நடந்திட எழுந்திடுவீர் - இவன்
இலட்சியப் பயணம் தொடர்ந்திடுவோம்!

8/3 லெப். உமாசங்கர் வீதி,
குருநகர்
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
உற்றார், உறவினர்
(சி 4767)

வெளிவந்துவிட்டது! வரதர் வெளியீடு:

அறிவுக் களஞ்சியம் -- 2

முதலாவது இதழ் வெளிவந்த ஐந்தே நாட்களில் விற்பனையாகி விட்டன. இரண்டாவது இதழ் இன்று வெளிவந்து விட்டது உங்கள் பிரதியை உடனே பெற்றுக் கொள்ளுங்கள்.

அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

சி 4760

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா

[சின்னத்துரை ஜீவராசா (சிவம்)]

கல்வியங்காட்டினில்
மழலையாய்
19.04.1962

ஆனையிறவினில்
மாவீரனாய்
27.07.1991

ஜீவராசா எனும் நாமம் கொண்டு
ஈழ ஜீவன்களைக் காத்திடவே
சதியவனின் சதி முன்னே
சமர்புரிய நீயும் அன்று
சரா அண்ணன் ஆகினாயே
போர்க் களத்தில் நீயும் அன்று
பாதகனை எதிர்கொண்டு - பல
சாதனைகள் படைத்தாயே - பின்
ஆனையிறவுப் போரினிலே
ஆங்கீகாரப் படையுடனே மோதி

ஆறாத துயரமதில் எங்களை
ஆழ்த்தி மாவீரனாய் சென்றாயே
ஆறுதில்லை எம்மனது
அண்ணா! நீ கண்ட கனவிங்கு
நனவாகி வருவதனை
கண்டிடவே ஒரு பிறவி
எடுத்திங்கு வந்திடுவாய்
ஆண்டுகள் எத்தனை போனாலும்
அலையுதண்ணா உன் நினைவு - எம்
அன்பு கொண்ட உள்ளங்களில்

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(2886)

உங்கள் பிரிவால் துயருறும்
சித்தப்பா, அன்ரி,
தம்பிமார், தங்கைமார்

## 1 ம்ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் சிவம்-பவான்

(திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன்)

மலர்வு : 03· 06· 1972
உதிர்வு: 27· 07· 1991

ஆடித் திங்கள் அமைந்த இருபத் தேழும்
ஓடி ஒருவருடம் ஆயிற்று நினைக்கின்றோம்
புத்திக்கும் சக்திக்கும் புகழி னுக்கும்.
தித்திக்கும் குணத்தினுக்கும் செல்வனென்று
வித்துக்குள் முளைக்கையிலே வெளிவிடுத்தாய்.
சித்திக்கும் திருப்பரங் கிரிப்பெற்றோன்றன்
முத்துக்குள் முத்தே யெம் நெல்லை நாத.
சித்தத்தில் வாழுகின்றாய் திகழ்ந்து நீயோ
செத்திங்கு வாழுகின்ற சிறந்த வாழ்வு
எத்திக்கும் புகழ் மணக்க ஏந்தினாயே.

இன்று (27. 07. 1992) நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டு நிறைவின் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

இமையாணன்
உடுப்பிட்டி.
27. 07. 1992

குடும்பத்தினர்.
(சி4769)

சிந்தனைக்கு

உண்மைகளைப் புறக்கணிப்பதை நம்பியே நடைமுறை அரசியல் நடக்கின்றது.
— ஹென்றி அடம்ஸ்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## மதப் பூசலுக்கு அரசு வித்திடுகின்றது

கந்தளகமவில் உல்லாசப்பயணிகள் ஹோட்டல் கட்டுவதற்கு எதிராக அண்மையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் ஓர் பெரிய சிலுவையை வைத்திருந்தமை இன்று பெரும் மதப்பூசல் ஒன்றை உருவாக்கிவரும் கட்டத்தை அடைந்துள்ளது.

கந்தளகமவில் இடம் பெற்ற இச்சத்தியாக்கிரகத்தில் கன்னியாஸ்திரிகள் பௌத்த குருமார்கள், கிறிஸ்தவ பாதிரிமார்கள், முஸ்லிம் சமயத் தலைவர்கள் உட்பட பல சமயத்தைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொண்டனர். கந்தளகமவில், உல்லாசப் பயணிகள் ஹோட்டல் அமைக்கப்பட்டால், அது நகரின் புனிதத் தன்மையைப் பாதிக்கும். எனவே ஹோட்டல் கட்டுவதை நிறுத்த வேண்டும் என்பதே சத்தியாக்கிரகிகளின் கோரிக்கையாகும்.

இக்ஹோட்டல் அமைப்பதற்கு முதலில்எதிர்ப்பு தம்புல்ல விகாராதிபதியிடம் இருந்தே வந்தது. பின்னர், ஏனைய சமயத்தவர்களும் இணைந்துஇவ் எதிர்ப்பை சத்தியாக்கிரகத்தின் மூலம் வெளிப்படுத்துவதற்குமுடிவுஎடுக்கப்பட்டிருந்தது இந்நிலையில், இப் போராட்டத்தை எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டனர், இதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர்.

இன் நிலையில் அரசாங்கம் இப்போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டது. கந்தளகம சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்து கொண்ட கிறிஸ்தவர்கள் கையில் வைத்திருந்த சிலுவையைக் காரணம் காட்டி கிறிஸ்தவர்கள் தம்புலப் பிரதேசத்தில் புகுவதற்கு முயற்சிக்கின்றார்கள், இதன் மூலம், பௌத்தத்தின் புனித நகரான தம்புல்ல களங்கமடையப் போகின்றது என்ற புரளியை அரசாங்கம் திட்டமிட்டு கிளப்பியுள்ளது.

இதனை அரசாங்கமே திட்டமிட்டு கிளப்பியுள்ளது என்பதற்குஅரசாங்கத்தின்கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திகளும் படங்களுமே காரணமாகும். டெய்லி

# கூட்டுப்படைத் தலைமையக அதிகார மாற்றம்; பின்னணியில் நிகழ்ந்தவை

(நேற்றைய தொடர்ச்சி)

### ஆலோசனை வழங்கும் நிலை

இன்னுமொன்று, இங்கு சுட்டிக் காட்டப்படத் தக்கது. நவம்பர் 1991 இல் கூட்டுப் படைத் தலைமையகம் நிறுவப்பட்ட போது அது இராணுவத்தின் பிராந்திய கமாண்டர்கள், பிரிகேட் கமாண்டர்கள் போன்றோரை நியமிக்கும் அதிகாரம் கொண்டதாக இருந்தது. ஆனால் கடற்படை விமானப்படை ஆகியவற்றில் இத்தகைய நியமனங்களுக்கு அது உரித்துடையதாக இருக்கவில்லை.

புதிய வர்த்தமானி அறிவித்தலை படித்துப் பார்க்கும் போது அதில், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், தீர்மானித்தல், செயற்படுத்தல் ஆகிய பொறுப்புக்கள் யாவும் முப்படைகளின் தளபதிகளிடமும் பொலிஸ்மா அதிபரிடமுமே விடப்பட்டுள்ளதை தெளிவாகக் காணலாம். இப்போது கூட்டுப்படைத் தலைமைத் தளபதி வெறும் ஆலோசகராக மாற்றப்பட்டுள்ளார். அதுவும் நடவடிக்கைகளின் திட்டமிடுதல், தயாரிப்பு என்பவற்றின் முப்படைத் தளபதிகள், மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் மட்டுமே அவர் ஆலோசனைகளை வழங்க முடியும்.

இந்த நிலையில் கூட்டுப் படைத் தலைமையக தளபதி என்பவர் உண்மையில் அவதானியாக மட்டும் இருப்பதோடு அவர் வழங்கும் ஆலோசனைகள் கூட கவுன்சிலின் அங்கீகாரத்திற்கு விடப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலையில் தான் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் 1991ஆம் ஆண்டு நவம்பரில் பெற்றிருந்த அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு இப்போது முயற்சி செய்து வருகின்றது.

இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முகமாகவும் ஜெனரல்கள் ரணதுங்காவையும், வனசிங்காவையும் சாந்தப்படுத்தும் முகமாகவும் ஜனாதிபதி, வர்த்தமானி அறிவித்தலுக்கு விளக்கம் அளிக்க முற்பட்டார். முப்படைகளின் தளபதிகளும் தமது முயற்சிகளுக்கான விளைவுகளைக் காட்ட வேண்டும் என்று அவர் தமது விளக்கத்தில் தெரிவித்தார்.

### மாநாடுகள்

இதன் விளைவாக வழமைக்கு மாறான விதத்தில் முப்படைகளினதும் தளபதிகள் தத்தமது தலைமையகத்தை ஏக காலத்தில் அநுராதபுரத்திலும், கொழும்பிலும் வைத்துக் கொள்வதென ஏப்ரல் 15இல் தீர்மானித்ததுடன் ஒகஸ்டு மாத இறுதிக்குள்யாழ்ப்பாணத்தினுள் புகுவதெனவும் திட்டமிட்டனர்.

ஜனாதிபதி எடுத்த இந்த நடவடிக்கையால்முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மாஅதிபரும் நடவடிக்கைகள் அனைத்திலும் கூட்டுப் பொறுப்புஏற்கவேண்டியதாக இருப்பதுடன் எந்தவொருமுக்கியநடவடிக்கைக்கும்முன்பாகவும் வட்டமேசை மாநாடு நடத்த வேண்டி இருப்பதாகவும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கூட்டுப்படைத் தளபதியிடமிருந்து அதிகாரங்கள் மாற்றும் முடிவை ஜனாதிபதி எடுப்பதற்கு முன்பாக முன்னாள் இராணுவ அதிகாரியான டென்சிஸ்பெரேராவின்ஆலோசனையையும் பெற்றிருக்கக் கூடும். திரு.டென்சிஸ்பெரேரா கேந்திர திட்டமிடல் பிரிவின் இயக்குனராக உள்ளார். இப் பிரிவு கடந்த ஆண்டு ஓகஸ்டில் அமைக்கப்பட்டது இப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்கா இரகசிய அறிக்கை ஒன்றில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். திரு. பெரேரா தனதுஅறிக்கையில்முப்படைத் தளபதிகளுக்கு மேலாக ஒருவருக்கு அதிகாரம் வேண்டியதில்லை என்று தெரிவித்துள்ளார். பல்வேறு இராணுவ புத்திஜீவிகளினாலும் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை இராணுவத்தின் தலைமைத் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியின் கைக்குக் கிட்டியதா?என்பது தெரியவில்லை. அல்லது இதுதான் ஒகஸ்டு இறுதிவரை முப்படைத் தளபதிகளுக்கு காலக்கெடு விதிப்பதற்கு இட்டுச் சென்றதா? எவ்வாறாயினும் ஒகஸ்டு இறுதிக்கு முன்பாக யாழ்ப்பாணத்தினுள் இராணுவம் புகுந்து விடவேண்டும் என்னும் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன

ஒவ்வொரு நடவடிக்கையின் முடிவிலும் கேந்திர ரீதியாக எந்தளவு சாதிக்கப்பட்டிருக்கின்றது என்பது முப்படைத் தளபதிகளின் ஆற்றலுக்கு சான்றாகும்.

எந்த ஒரு போரிலும் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவது சகஜம். கட்டுப்பொத்த (வண்ணான்குளம்) இராணுவமுகாம் மீதான புலிகளின் தாக்குதல் இதில்விதிவிலக்கல்ல. கடந்த நான்கு மாதகாலமாக விடுதலைப்புலிகள்மீதுபலமுனைகளிலும் இருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதுடன் பெருமளவு நிலப்பரப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் தற்போது நிலத்தைக் கைப்பற்றுவதிலும் கைப்பற்றும் பகுதியை பாதுகாப்பதிலும் விடுதலைப் புலிகளை போத்தல் வாயொன்றினுள் தள்ளுவதும் போன்ற செயற்பாட்டிலும் ஈடுபட்டு உள்ளனர். இதில் படையினர் பெருமளவு இழப்புக்களை சந்திப்பதும் தவிர்க்க முடியாததுதான். மீண்டும் ஆட்களை இழக்காமல் போரை வெல்ல முடியாது என்ற இராணுவ ஆய்வாளர்களின் கூற்றை இங்கு மேற்கோள் காட்ட வேண்டியதாயிற்று.

அளம்பில் கைப்பற்றப்பட்டது ஒரு வகை மாதிரி இந்திய இராணுவத்தால் கூட கைப்பற்ற முடியாததாக இப்பிரதேசம் இருந்தது. ஒப்பரேசன் சத்பலய என்பது இந்நடவடிக்கை ஆகும். தெல்லிப்பழையை கைப்பற்ற மூன்று முறை முயற்சிக்கப்பட்ட பின்னர் ஒப்பரேஷன் சண்ட மாருதம் மூலம் அது சாத்தியமானது.

ஜே வி.பி. ஒரு சமூக மாறுதலுக்காகப் போரடியதை போலன்றி விடுதலைப்புலிகள் ஒரு பிரதேசத்திகாகப் போரிடுகின்றனர். எனவே பிரதேசத்தைக் கைப்பற்றி பாதுகாப்பது இங்கு இராணுவத்திற்கு முக்கியமாகின்றது.

இது ஈழப்போர் ! இல் இருந்து சிறிலங்கா இராணுவம் பெற்ற படிப்பனையாகும்.

### புதிய நம்பிக்கை

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்படி படையினருக்கு ஆணையிட்ட போது அப்போதைய பாதுகாப்புசெயலாளரான சேபால ஆட்டிகலவும், கூட்டுப்படைத் தளபதியானசிறில் ரணதுங்காவும் வாராந்த அமைச்சரவை மாநாட்டில்தம்மிடம் போதிய ஆட்பலம் இல்லை எனத் தெரிவித்தனர். அத்துடன் விமானப்படை தாக்குதல் நடத்த மறுத்தது.

அதனைத் தொடர்ந்து அவர்இந்தியாவுடனானஉடன்படிக்கையை கைச்சாத்திட்டார். அப்போது ஜனாதிபதி மாளிகையில் ஆயுதப் படைத் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகளிடையே அவர் பேசுகையில் ''எனது பேனாவின் ஒரு துளி மையின் மூலம் உங்களுடைய ஜெனரல்களின் உயிரைப் பாதுகாத்திருக்கிறேன்'' எனத் தெரிவித்தார்.

ஆனால் இப்போது முப்படைகளின் தளபதிகளும். பொலிஸ் மா அதிபரும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது பற்றி புது நம்பிக்கையோடு செயல்படுகின்றனர்.

கூட்டுப் படைத் தலைமையகத்தில் கடந்த மார்ச் மாதத்தில் சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசாவினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் பின்னணியில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி ஜூலை19-ந் திகதிய சண்டே ரைம்ஸ் வார இதழில் வெளியாகிய கட்டுரையின் மொழியாக்கம் இது.

அரச சார்பில் வெளியிடப்படும் ஒப்சேவர் பத்திரிகை ஜூலை எட்டாம் திகதி இதழில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் செயற்பாடுகள் பயனற்றவை எனத் தெரிவித்திருந்தது. இதுவரையில் அதற்கான மறுப்பு எதையும் அப் பத்திரிகை வெளியிடாமலிருப்பது அரசின் மனமாற்றத்தைக் காட்டுகின்றது. இந்தநிலையில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் சிறு பிளவுகள் மீண்டும் புலிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கி விடும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

# ஜேம்ஸ் பேக்கர் விரைவில் அதிகாரங்களை பொறுப்பேற்பார்

## - வெள்ளை மாளிகை அதிகாரிகள் தகவல்

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பிரதம கொள்கை ஆலோசகராக ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் அடுத்த மாதம் முதல் கடமையாற்றுவார் என வெள்ளை மாளிகை அதிகாரிகளும் புஷ் பிரசார இயக்க உதவியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இதன் பொருட்டு ஜேம்ஸ் பேக்கர் வெள்ளைமாளிகைக்கு வரவுள்ளார் என்றும், இவர்

## முதலாவது தங்கப் பதக்கம்

# பிரித்தானிய ராஜதந்திரியை வெளியேற ஈரான் பணிப்பு

(தெகிரான்)

தெகிரானில் உள்ள பிரிட்டிஷ் தூதரக மூன்றாவது செயலாளரை ஒரு மாதத்திற்குள் ஈரானை விட்டு வெளியேறுமாறு ஈரான் உத்தரவிட்டுள்ளது.

இராஜதந்திர வழிமுறைகளுக்கு முரணாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதே நேரத்தில் ஈரான் பாதுகாப்புப் படையினரால் யூன். 17 ஆம் திகதியன்று பிரம்மா பல மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டதைப் பிரிட்டிஷ் ஆட்சேபித்துள்ளது.

## பேக்கரை சந்திக்காவிடில்

இன் நிலையில் அரசாங்கம் இப்போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டது. கந்தளகம சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்து கொண்ட கிறிஸ்தவர்கள் கையில் வைத்திருந்த சிலுவையைக் காரணம் காட்டி கிறிஸ்தவர்கள் தம்புலப் பிரதேசத்தில் புகுவதற்கு முயற்சிக்கின்றார்கள், இதன் மூலம், பௌத்தத்தின் புனித நகரான தம்புல்ல களங்கமடையப் போகின்றது என்ற புரளியை அரசாங்கம் திட்டமிட்டு கிளப்பியுள்ளது.

இதனை அரசாங்கமே திட்டமிட்டு கிளப்பியுள்ளதுஎன்பதற்குஅரசாங்கத்தின்கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திகளும் படங்களுமே காரணமாகும். டெய்லி நியூஸ்பத்திரிகை சத்தியாக் கிரகத்தில் இருக்கும் கன்னியாஸ்திரிகள் ஒரு பெரிய சிலுவையை வைத்திருப்பதைப் பிரசுரித்துள்ளது. இதேவேளை, சத்தியாக்கிரகத்தை ஏற்பாடு செய்தவர்கள் இவ்வாறு சிலுவை வைத்திருப்பதை அனுமதித்தமைக்காகக் கண்டனம் செய்யும் அறிக்கைகளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. அதாவது, அரச கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகள் இதன் மூலம் மதங்களுக்கு இடையில் முரண்பாடு வளரத் தீனிபோட்டனர். பௌத்த பேரின வாதசக்திகளும் அதனைப் பயன்படுத்த தொடங்கின.

"தம்புல்ல புனித பிரதேசம் பௌத்த மக்கள் அனைவரதும் ஒரு அரிய பொக்கிசமாகும். பௌத்தர்களின் புனித பிரதேசங்களில் காலனித்துவ ஆட்சியாளர்கள் கூட பிறமதவழிபாட்டு தலங்களை அமைக்க முற்படவில்லை" என மிகிந்தலை ராஜ மகா விகாராதிபதி தெரிவித்தார். இதேபோன்று பல விகாராதிபதிகள் பௌத்தர்களுக் ஆத்திரத்தை ஊட்டும் கண்டன அறிக்கை வெளியிட்டனர்.

அதாவது, தம்புல்லப் பிரதேசத்திற்குள் ஒரு சிலுவை கொணடு வரப்பட்டது — அது நிலத்தில் நிறுத்தப்படக் கூடவில்லை - என்பதைக் காரணமாக வைத்து ஒரு பெரும் பிரச்சினை ஒன்றிற்கு அரசாங்கம் வித்திட்டுள்ளது. அரசிற்கெதிராக போராட்டம் நடத்தும் சக்திகளைத் திசை திருப்பி விடவும் போராட்டத்தை முறியடிக்கவும் பெரும் மத பூசல் ஒன்றை கிளறிவிடவும்அரசாங்கம்தயாராகியுள்ளது. அத்தோடு, மதப்பூசலுக்கு அரசியல் வடிவம் கொடுத்து பெரும் மோதல்களுக்கும் அரசாங்கம் வித்திடுகின்றது.

இது தமிழரின் உரிமைப் பிரச்சினையை எவ்வாறு பௌத்த மதத்துடன் இணைத்து சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறு இரத்த ஆறு ஓட வழிவகுத்தார்களோ அதேபோன்று ஹோட்டல் விவகாரம் ஒன்றையும் பௌத்த பேரினவாதத்துடன் இணைத்து பெரும் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளனர். சிங்கள ஆட்சியாளருக்கு மக்கள் இருந்தாலென்ன, இறந்தலென்ன, நாடு எக்கேடு கெட்டுப் போனாலென்ன, அவர்களுக்குத் தேவைப்படுவது அரசியல் அதிகாரம். அதைத் அடைவதற்கு மக்கள் மத்தியிலுள்ள எச்சிறிய முரண்பாட்டையும் கையாள அவர்கள் தயங்கப் போவதில்லை.

---

# ஜேம்ஸ் பேக்கர் விரைவில் அதிகாரங்களை பொறுப்பேற்பார்

## - வெள்ளை மாளிகை அதிகாரிகள் தகவல்

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பிரதம கொள்கை ஆலோசகராக ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் அடுத்த மாதம் முதல் கடமையாற்றுவார் என வெள்ளை மாளிகை அதிகாரிகளும் புஷ் பிரசார இயக்க உதவியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இதன் பொருட்டு ஜேம்ஸ் பேக்கர் வெள்ளைமாளிகைக்கு வரவுள்ளார் என்றும், இவர் பிரசார இணைப்பாளராகவும் செயலாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சராக இருக்கும் ஜேம்ஸ் பேக்கர் புஷ்ஷின் விசேட ஆலோசகர் பதவியைஏற்பதற்காக தமது தற்போதைய பதவியை ராஜினாமாச் செய்வார் அல்லது லீவில் செல்வார் என குடியரசு வட்டாரங்கள் கூறின.

இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் புஷ்ஷின் வெற்றிக்காக என்ன செய்யலாம் என்ற ஆலோசனைகளை ஜேம்ஸ் பேக்கரால்தான் வகுக்க முடியுமென பிரசார உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை ராஜாங்க அமைச்சர் பதவியை உதவி அமைச்சர் லோரன்ஸ் ஈகல் பேக்கரிடம் கையளிக்க புஷ் எதிர்பார்ப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

---

# முதலாவது தங்கப் பதக்கம் தென் கொரியாவிற்கு

(பார்ஸிலோனா)

பார்ஸிலோனாநகரில் ஆரம்பித்திருக்கும் 25 ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் தென் கொரியா முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

மகளிருக்கான வானத்து இலக்கைத் துப்பாக்கியால் சுடும் போட்டியில் தென் கொரியாவைச் சேர்ந்த பதினெட்டு வயது வீராங்கனை காசூல் இயூக் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வென்றார். பல்கேரியாவில் பசீலா லெசேல் வெள்ளிப்பதக்கத்தையும், யுக்கோஸ்சுலவேக்கியாவின் சுயேட்சைப் போட்டியாளரான அளக்கா பிஸ்டேல் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

மேலும் ஆண்களுக்கான 100 கி.மீ.யில் ஜெர்மன் நாடு முதலாவது இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது. இத்தாலி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், பிரான்ஸ் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டன.

---

சிங்கள

ளில் இருந்து வெளியேற்றி அகதி முகாம்களுக்கு இட்டுச் செல்ல உதவலாம்.

அடுத்ததாக தற்பொழுது இலங்கை திரும்பும்அகதிகளின் புனர்வாழ்விற்கும் அரச சார் பற்ற நிறுவனங்கள் உதவலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

---

மதுறு

வலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மதுறுஓயா திட்டம் அண்மையில் அபிவிருத்திசெய்யப்பட்டது என்றும்,

1,29,103 ஹெக்ரேயரைக் கொண்டுள்ள இந்தப் பகுதியில் 12,600 ஹெக்ரேயருக்கு நீர்ப்பாசனம் வழங்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது

---

ஐலன்ட்

வில்லை என்பதைச் சுட்டிக் காட்டி 'ஐலன்ட்' நாளிதழில் ஆசிரியர் தலையங்கம் எழுதப் பட்டிருந்தது.

இதனைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் அமரதுங்க சபையின்கண்ணியத்தையும், கௌரவத்தையும் இந்தப் பத்திரிகை மாசுபடுததுவதாகவும, பொறுப்புணர்ச்சியற்ற வகையில் செய்தி வெளியிடுவதாகவும் 'ஐலன்ட்' நாளிதழைச் சாடினார்.

---

கப்பல்

டிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சுமார் 1000 பீப்பா மண்ணெண்ணெய் மற்றும் 200 பீப்பா தேங்காயெண்ணை ஆகியவை இக் கபபல்ல் எடுதது வரப்பட இருக்கிறது.

---

# அகதிகளுக்கு அனுமதி தர அமெரிக்கா திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அரசு அடுத்த ஆண்டில் ஒரு லட்சத்து முப்பத்தியிரண்டாயிரம் அகதிகளுக்கு அனுமதி அளிக்கவிருப்பதாகதெரியவருகின்றது கிழக்கு ஆசியா மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் ஆகியவற்றைச் சேர்ந்த ஒரு லட்சத்து முப்பத்தியிரண்டாயிரம் அகதிகளை அனுமதிக்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் திட்டமிட்டு வருவதாக உதவி வெளிநாட்டமைச்சர் லோறன்ஸ் பெர்டினர் கூறியுள்ளார். உலகிலுள்ள மொத்த அகதிகளின் எண்ணிக்கை நூற்றிஅறுபது லட்சத்திற்கும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

தடுத்து

எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது

நீதியரசர்கள் மார்ச்பெர்னான்டோ, ஏ.எம்.எம்.பி. குலதுங்க. எஸ். டபிள்யு.பி. வடுகொடபிட்டியா ஆகியோர் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

---

# தீ விபத்து

(சென்னை)

சென்னை பெரம்பூர் தொகுதியில்இருக்கும் வ.உ.சி. நகரில் வெள்ளிமாலை ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக சுமார் நூற்றி அறுபது குடிசைகள் எரிந்து நாசமாகியிருப்பதாக தெரிய வருகின்றது.

---

# பிரித்தானிய ராஜதந்திரியை வெளியேற ஈரான் பணிப்பு

(தெகிரான்)

தெகிரானில் உள்ள பிரிட்டிஷ் தூதரக மூன்றாவது செயலாளரை ஒரு மாதத்திற்குள் ஈரானை விட்டு வெளியேறுமாறு ஈரான் உத்தரவிட்டுள்ளது.

இராஜதந்திர வழிமுறைகளுக்கு முரணாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதே நேரத்தில் ஈரான் பாதுகாப்புப் படையினரால் யூன். 17 ஆம் திகதியன்று பிரம்மா பல மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டதைப் பிரிட்டிஷ் ஆட்சேபித்துள்ளது.

---

# பேக்கரை சந்திக்காவிடில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்

## லெபனான் அதிகாரிகள்

(பெய்ரூட்)

அமெரிக்காவின் ராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் பேக்கரை எமது நாட்டில் சந்திக்காது போயிருந்தால் அது நாட்டின் மதிப்புக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்று லெபனான் அதிகாரிகள் கூறினர்.

ஜேம்ஸ் பேக்கர் அண்மையில் லெபனானுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டது தெரிந்ததே. கடந்த சுமார் பத்தாண்டு காலத்தில் அமெரிக்க தலைவர் ஒருவர் லெபனானுக்குவிஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும்.

பெக்கா பள்ளத் தாக்கில் லெபனான் தலைவர் எல்லிங் ஹறாவியை சந்தித்துப் பேசிய அவர் பெய்ரூட்டிலிருந்து சிரியத் துருப்புக்கள் விலக வேண்டும் என்றகோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தார்.

---

# திருநாவுக்கரசு கைது காவல்துறைக்கு அவமானம்

[சென்னை]

எம். ஜி. ஆர். அ. தி. மு. கழகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதனால் தமிழக அரசு மாத்திரமல்ல தமிழக பொலிஸ் கூட அதன் மதிப்பை இழந்து விட்டது என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் லஷ்மநாராயணன் கூறியுள்ளார்.

திருநாவுக்கரசு 1947 ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி கைது செய்யப்பட்டதால் அது செல்லுபடியாகாது. 1988 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியே அவர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறித் திருநாவுக்கரசை நீதிமன்றம் விடுதலை செய்தது.

திருநாவுக்கரசு அமைச்சராக இருந்த காலத்தில் 22 கோடி ரூபா மோசடி செய்தார் என்று ஜெயலலிதா அரசு அவர் மீது குற்றம் சாட்டியிருந்தது.

---

# ஜப்பான் ரயர்களில் புனித நூல் வரி வடிவம்

## பூருணையில் தடை

கொரிய முஸ்லிம் புனித நூல் ஒன்றில் காணப்படும் வரி வடிவங்களை ஒத்ததாக ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயரின் வரிகள் காணப்பட்டதால் அவை பூருணையில் தடைசெய்யப்பட்டன.

ஜப்பானிய நிறுவனம் ரயர்

ஒன்றில்இருந்து மிச்சுபிசுஜீப்புகளுக்கு பாவிக்க இறக்குமதி செய்யப்பட்ட தரயர்கள் முஸ்லிம்களின் உணர்வுகட்கு எதிரானவைஎன புகாரிட்டுள்ளனர்.

ஈழநாதம்

# மதுறுஓயாத் திட்டத்தில் 21,507 சிங்கள குடும்பம் குடியேற்றம்

(கொழும்பு)

மதுறுஓயா திட்டத்தின் கீழ் அப்பகுதிகளில் கடந்த மாதம்வரையில் 21,507 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்என்று காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இருந்து தெரியவருகிறது.

துரிதப்படுத்தப்பட்ட மகா

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அவசரகால

இஷாக் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த ஐந்து வருடகால தற்காலிக வடக்கு கிழக்கு இணைப்பின் மூலம் அங்குள்ள முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. இதே போன்றே அங்கு வாழும் சிங்கள சிறுபான்மை மக்களுக்கும். பினவே நிரந்தர இணைப்நனால் இவர்களுக்கு என்ன என்மை கிடைக்கப்போகிறது கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கமும் கிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர்கேட்டுக் கொண்டார்.

## இரு சரக்கு

முடித்து இருப்பதாகவும், அதையடுத்து பெருந்தொகையான ஆயுதங்களைக்கொண்டு வருவதற்கும் ஏற்பாடுகள் இடம் பெற்றுவருதாகவும் கடற்படையினருக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து கிழக்கு கடற்கரையோரமாக கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.


## 1-ம் ஆண்டு வீரஅஞ்சலி



**வீரவேங்கை சிகானு**

(கதிரவேலு கருணேஸ்வரன் றொபின்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18· 12· 1973 | 27. 7 1991 |

ஈரம் காயவில்லை விழியில் இன்னும் உன்
வீரம் நினைவில் நிலைக்கிறது இன்றும்
ஓர் ஆண்டு போனால் என்ன?
போர் தொடரும் . . . இலட்சியங்கள் வெல்லும்

-குடும்பத்தினர்

முழங்காவில் (சி4775)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

எல்லா வகையான ஆங்கில வீடியோ திரைப்படங்களையும் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும். நிறைய ஆங்கில வீடியோ படங்கள் பார்த்த அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. 05-08-92 இற்குமுன்னர். விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

விளம்பரஇல 162
மே/பா ஈழநாதம்
இல 31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம்.

[சி. 4771]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். ராஜு**

[சிவஞானசுந்தரம். ஐங்கரன்]

| தாயகத் தாய் மடியில் | தமிழீழத் தாய் விடிவில் |
|---|---|
| 28.05.1968 | 27.07.1988 |

தரணியில் தமிழர் தம் தலை நிமிர்ந்திடவே
அண்ணன் பிரபாகரன் பாசறையில். சேர்ந்தனையே
அமைதி கெடுக்க வந்த இந்தியப் படையை
அடலேறு போல் நின்று எதிர்த்தனையே
காட்டிக் கொடுக்கும் கயவர் தம் செய்கையால்
காற்றோடு காற்றாய் கலந்தனையே
ஆவி பிரிந்து அகன்றாலும் - நின்
அரும்பணி தொடரும் பூமியிலே
தமிழர் தாயகம் மீட்டிடுவோம்
தமிழ் ஈழம் கண்டிடுவோம்

அளவெட்டி. குடும்பத்தினர், நண்பர்கள்

(2885)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## ஆண்டு 12 பொதுப் பரீட்சை யூலை 92

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விஞ்ஞானப் பொருட்காட்சியைப் பார்வையிடும் சந்தர்ப்பத்தை உயர்தர வகுப்பு மாணவருக்கு வழங்குவதற்காக 28-07-92 செவ்வாய்க்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். கேணல் சரா**

(சின்னத்துரை ஜீவராசா)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 19-04-1962 | 27-07-1991 |

ஆனையிற அரக்கர் தம்போரினிலே
தானைத் தலைவனாய் சாகும்வரை போராடி
உன்னுயிரை ஈந்த என்னருமைச் சராவே
உன்னருமை நண்பராம் உரம்படைத்த புலிவீரர்
உன் பணியைத் தொடர்வார்கள்
இது உறுதி இது உறுதி

ஆகாய கடல்வெளிப் போரிலே வீரச்சாவடைந்த மாவீரர்கட்கும் எமது அஞ்சலிகள்.

தமிழீழத்திற்காகப் போராடும் புலிவீரர்களையும் உற்றார் உறவினர் நண்பர்களையும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

''தாயகம்''
லெப். கேணல் சரா வீதி,
ஞா.பா. ச. வாசிகசாலை அருகில்
கல்வியங்காடு.

சினனத்துரை குடும்பமும்
பெரியம்மாவும்

(2880)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி





27. 7. 91ல் ஆனையிறவு உப்பள விடுதிமுகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை

## 2ம் லெப். ஜசீர்மா

(சிவானந்த ஐயர் சிவலோஜினி)

ஜனனம் 1974· 01· 24 — வீரச்சாவு 1991 07· 27

திதி ஆடி அபர பிரதமை 1992. 08 14

பகை கண்டு பதறாமல்
நிலை யெடுத்தாள் - எதிரி
புறம் காட்டி ஓடிடவே
போர் தொடுத்தாள்
உயிர் போகும் என
இவள் அஞ்சவில்லை
உயிரான விடுதலைக்கே
தன்னுயிர் ஈந்தாள்

அல்வாய் மேற்கு,
திக்கம். (2866) குடும்பத்தினர்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**26-07-1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
24-98, 26-1169, 24-207, 24-4475, 26-5202, 24-4560, 42-6972, 24-5529, 41-1227, 28-0921, 26-3518, 28-8051, 28-1185, 41-3605, 24-9645, 26-5962, 42-6452, 27-297. 41-1665, 42-2355, 25-5950, 37-2002, 22-6765.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:-
26-6026, 24-1797, 40-6979, 27-7750,41-9997, 27-9825, 28-6640, 26-3250, 27-5945, 27-5217, 42-970, 36-4552, 37-1496, 36-4144, 36-4505, 37-2035, 36-4582, 25-140, 25-3794, 22-8878

பார்வையிடும் சந்தர்ப்பத்தை உயர்தர வகுப்பு மாணவருக்கு வழங்குவதற்காக 28-07-92 செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பின்வரும் பாடங்களுக்கான பரீட்சைகள் மட்டும் 31-07-92 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

31 - 07 - 92 வெள்ளி
முற்பகல் 8.30 — 11 30
பிரயோககணிதம்,
விலங்கியல்

க. சின்னத்தம்பி
தலைவர்,
தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம்.
[சி/4778]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

லெப் - கேணல்

**சரா**

வீரப்பிறப்பு: 19-04-1962
வீரச்சாவு:- 27-07-1991


ஆனையிறவிலோர் சமர்
எழுந்தது
ஆயிரம் எனப் படை
குவிந்தது
''வான் கடல் வெளிச்''
சமரதனிலே
வந்த எதிரியின் பிணம்
விழுந்தது
நான் முந்தும்வன் என்று
''டோசரை''
நகர்த்தி எதிரியின் முகாம்
புகுந்தனை
ஏன் உனக்கொரு இடர்
நிகழ்ந்தது?
எங்கள் நெஞ்சிலே துயர்
கவிந்ததே!

என்றும் நினைவோடு
திருமலைத் தொடர்பகம்
கொக்குவில்.
[சி/4780]

இப்பத்திரிகையாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

(2885)

## 1-ப் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை சகீம்

(நாகலிங்கம் ஜெகதாஸ்)

தாயின் மடியில் 30.12.1973 — தாயகமண்ணில் 27.07.1991

தமிழீழம் காத்திடவே
எம் தரணியிலே ஒருவனாக
தன் மானத் துணிவுடனே
புறப்பட்டாய் புலியாக
ஆனையிறவுப் போரினிலே
வீரமுடன் வீறு கொண்டு
உன் உயிரைக் கொடுத்தாயோ
ஓராண்டு ஆனதையா
ஓயவில்லை உன் நினைவு
உன் இலட்சியம் தாகம்
நிறைவு பெற பிரார்த்திக்கிறோம்
உன் பெயரால்

செல்வபுரம்,
உரும்பராய்.

தாய், தந்தை, சகோதரர்
உற்றார், உறவினர்கள்.
(4774)



## 2-வது லெப. தமபா

(வின்சென்ற் பிரான்சீஸ் ஞானதீபன்)

வீர ஜனனம் 27.06.1969 — வீர மரணம் 27.07.1987

இளவாலை மண் பெற்றெடுத்த — தம்பா
எம் மண்ணில் எதிரி கால்பட
நெஞ்சம் தாங்குமோ என்று
கல்வியைப் பாதியில் நிறுத்தி
புலிப் படையில் சேர்ந்தவனே
போரினால் சிவந்து
வீரம் செறிந்த எம் மண்ணில்
பாய்ந்து பல களமாடிய வீரனே!
அன்று பூநகரியில் வீரகாவியம் எழுத
வெடித்த போரில் நீ வித்தாகி — இன்று
ஆண்டைந்து நிறைகின்றது.
வீரனே!
வெடித்த போர் முடிவின்றி ஓயாது
முடிவிலே கொடி பறக்கும் — அந்நாள்
உன் இலட்சியம் வென்ற நாள்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சென்யேம்ஸ் வீதி,
இளவாலை. [சி-4772]

பிரிவால் துயருறும்
பெற்றோர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.